<u>பிறந்தநாள் வாழ்த்து!</u> **12-07-2020**

மண்ணகத்தில் வந்துதித்து,
மறுவிலாப் பெருமை கொண்டு;
பெண்ணென நாளும் போற்றியே;
பெற்றோர் மகிழ்ந்தே வளர்த்து,
கண்ணெனக் காலம் கனிந்து,
கனிவுடை **பாஸ்கர்** தன்னை
கண்ணாளனாய்க் கைத்தலம் பற்றக்
கண்ணுடை மகனாய் **ஆதித்யா**!



தென்னகத்தின் பெருமை கொண்டு;
தீதில்லா மறைகள் அறிந்து,
அன்பு மனையாளாய் **ஷ்ரியா**வை
அகமகிழ்து ஏற்று வாழ,
தன்னிக ரில்லாத் தங்கை,
திலகவதிக்குப் பிறந்தநாள்!
பொன்னிகர்த்தப் பெருமையுடன்,
வாழ்க எந்நாளும் நிறைந்தே!

அன்புடன்,
கு.ப. அசோகன்